தாழ்த்தப்பட்டவர்களில் தகுதி உள்ளவர்கள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்; அதிலே மீதி இருந்த இடங்கள் முழுவதும் பிற்பட்ட வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சதவிகித அடிப்படையில் பார்த்தால் 7 சதவிகிதம் தாழ்த்தப் பட்டவர்கள்; 50 சதவிகிதத்தினர் பிற்பட்ட வகுப்பினர்; பிற வகுப்பினர் எல்லோரும் சேர்ந்து 42 சதவிகிதத்தினர்.

திரு. நா. வீராசாமி: பார்ட் டைம் பி.இ. கோர்சில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்? சிவில் எஞ்சினியரிங் மாணவர்களுக்கு கிராக்கி இருக்கிறது. எட்டு ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களுக்குத்தான் பி. இ. சிவில் எஞ்சினியரிங் கொடுக்கிறார்கள். ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்களுக்குத்தான் பி.இ. எலட்ரிகல், மெகானிக்கல் கோர்சில் இடம் கிடைக்கின்றது. ஆகவே, வயதானவர்களுக்குத்தான் வாய்ப்பு இருக்கிறதே தவிர, இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் அனுபவம் பெற்றவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆக, இதை மனதில் கொண்டு 5 ஆண்டுகள், 8 ஆண்டுகள் அனுபவம் இருக்கவேண்டுமென்ற முறையை நீக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: குறைந்தது மூன்று ஆண்டுக் காலம் வெளியே பணியாற்றியிருக்க வேண்டு மென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு வருகிறவர்கள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 17 ஆண்டுகள் அனுபவம் பெற்ற வர்கள் எல்லாம் வருகிறபோது அவர்களுக்குதான் முதலிடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி முதலிடம் தருகிறபோது பின்னால் தேர்வு பெற்று வருகிறவர்கள் தேங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவ்வளவு பேரையும் எடுத்துக் கொள்ள போதுமான அளவுக்கு பொறியியற் கல்லூரிகளில் இடம் இல்லை. சிவில், மெகானிகல், எலெக்ட்ரிகல் ஒவ்வொன்றுக்கும் 30 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் இட வசதியைப் பொறுத்து 20 இடங்கள் வீதம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

திருவொற்றியூரில் தொழில் நுணுக்கப் பள்ளி

* 247 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

1975 நவம்பர் 10]

(அ) திருவொற்றியூர் நகரில், ஒரு தொழில் நுணுக்கப் பள்ளி துவக்கிடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்திலிருந்தே புதிய தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களைத் துவங்க வேண்டியதில்லை என்றும் இருக்கிற வசதிகளைச் சீர் செய்வதிலும், தரத்தை மேம்படுத்துவதிலும்தான் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் திருவொற்றியூரில் ஒரு தொழில் நுட்பப் பள்ளி துவக்க வேண்டுமென்ற தொழில் நுட்பப் பள்ளி துவக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. மா. வெ. நாராயணசாமி: திருவொற்றியூர் நிரம்ப தொழிற்சாலைகள் உள்ள பகுதியாக உள்ளதாலும், பக்கத்தில் எண்ணூர், மணலி போன்றவை தொழில் பகுதிகளாக விளங்கி வருவதாலும் இப்படி ஒரு பாலிடெக்னிக்கை அந்தப் பகுதியில் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கை நிரம்ப நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு அரசு போதிய அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யக்கூடிய சூழ்நிலை இல்லை என்றாலும் அந்த வட்டாரத்தில் இருக்கிற தொழிலதிபர்களை வற்புறுத்தி நிதி அளிக்கச் சொல்லி தொழில் நுட்பப் பள்ளியைத் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் கொள்கை அளவில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கின்ற பல்தொழில் நுட்பப் பள்ளிகளின் அளவு, மாணவர்கள் அளவு, வேலை வாய்ப்புப் பெறுகிற அளவு ஆகியவற்றை வைத்துக் கணக்கிட்டு புதிய தொழில் நுட்பப் பள்ளிகள் தொடங்கப்படக் கூடாது என்று அகில இந்தியத் தொழில் நுட்ப போர்டும் குறிப்பிட்டிருக்கிறது, மாநில தொழில் நுட்ப போர்டும் அந்த வகையில்தான் கருத்தறிவித்திருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதும் புதிய தொழில் நுட்பப் பள்ளிகளைத் தொடங்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சிலபல

கோர்சுகளை, சான்ட்விச் கோர்ஸ் போன்றவற்றை ஏற்படுத்த வேண்டுமென்றால் இருக்கிற பல்தொழில் நுட்பப் பள்ளிகளிலேயே அவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம், மேம்பாடு செய்யலாம் என்று அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் முடிவெடுக்கப் பட்டிருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரை மூன்று, நான்கு பல்தொழில் நுட்பப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிலே யாரும் சேர வாய்ப்பிருக்கிறது.

திருமுல்லைவாசலில் உயர்நிலைப்பள்ளி

*248 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி வட்டம், திருமுல்லைவாசலில் உயர்நிலைப்பள்ளி அமைத்திட பொதுமக்கள் பங்குத் தொகை ஏதேனும் கொடுத்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆம். பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 12,500-ம், பள்ளி பராமரிப்புக்காக ரூ. 10,000-ம் கொடுக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா: சீர்காழி வட்டம், திருமுல்லைவாயிலில் உயர்நிலைப் பள்ளி அமைத்திட வேண்டுமென்று கடல் கடந்து வாழ்கின்ற கொடிணம்பாளையம், திருமுல்லைவாயிலைச் சார்ந்தவர்கள் அதற்காக நிதி அனுப்பியிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றும் முகத்தான் பள்ளிக் கட்டடத்தைக் கட்ட ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளிக் கட்டடம் கட்டுவது பற்றிய நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்பது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. போதுமான அளவுக்குக் கட்டிட வசதி இல்லாத பள்ளிகளுக்குக் கட்டிட வசதி ஏற்படுத்த ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகை மாவட்ட அளவில் ஒதுக்கப்படுகிறது. மாவட்ட முதன்மைக் கல்வியதிகாரி பள்ளிகளின் நிலைமையை ஆராய்ந்து குறிப்பிட்ட தொகையை ஆங்காங்கு ஒதுக்குகிறார்கள். ஆங்காங்கு இருக்கும் கட்டடக் குழுவினரும் நிதி திரட்டி ஈட்டு மானியமாகப் பெற்று சிலபல